**செய்தி வெளியீடு எண்: 149** **நாள்: 06.03.2013**

# ***<u>பத்திரிக்கைச் செய்தி</u>***

மேல்நிலைப்பொதுத் தேர்வு – மார்ச் 2013 தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 01.03.2013 முதல் தொடங்கி 27.03.2013 வரை நடைபெறுகிறது. இத்தேர்வில் 3,73,788 மாணவர்களும் 4,30,746 மாணவிகளும் என மொத்தம் 8,04,534 மாணாக்கர்கள் தேர்வு எழுதுகிறார்கள். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் 2020 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று (06.03.2013) நடைபெற்ற ஆங்கிலம் முதல் தாள் தேர்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் நலன் அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் பிரசிடென்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி, எழும்பூர், டான்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, எழும்பூர், மற்றும் சர் முத்தையா செட்டியார் மேல்நிலைப்பள்ளி, புரசைவாக்கம் ஆகிய தேர்வு மையங்களை திடீரென பார்வையிட்டு அரசுத் தேர்வுத் துறையால் வழங்கப்பட்ட அறிவுரைகள் அனைத்தும் சரியாக பின்பற்றப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பள்ளிக்கல்வித்துறை முதன்மைச்செயலர் திருமதி.த.சபிதா இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**